IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, RANIPET, VELLORE DISTRICT.

06.02.2019

Case No. OS 226/2008 PW1 கிருஷ்ணன்

• கு.வி. தொடர்ச்சி

சர்வே எண்கள் 430, 431, 165/1 வீட்டு மனை பூாவீகச் சொத்துக்கள். மற்ற சொத்துக்கள் என் தம்பிக்கு அரசாங்கம் கொடுத்த நிலம். அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் பெங்களூரில் இருக்கிறேன் கூலி வேலை செய்கிறேன். பொன்னுசாமி மனைவி குமுதா கோவிந்தச்சேரி குப்பம் 165/82/1 பஜனை கோயில் தெருவில் தளம்போட்ட வீட்டில் இருக்கிறாா். அதன் அளவு 50X 50 அரசாங்கம் கட்டி கொடுத்த வீடு. 3 முதல் 5 பிரதிவாதிகள் அதே ஊரில் இருக்கிறார்கள் மழை இல்லாததால் பயிா் தொழில் செய்யவில்லை சென்னை சென்று வேலை பார்க்கிறார்கள். 12 முதல் 76 சொத்தை பிரதிவாதிகள வாங்கிய் விவரம் எனக்கு 2006ல் வில்லங்கம் போட்டு பார்த்தபிறகு தெரியவந்தது. 2008 ல் கிரயப்பத்திரம் வாங்கிப்பார்த்தேன். அந்த கிரையங்கள் செல்லாது என்று நான் பரிகாரம் கேட்டுள்ளேன். ஒவ்வொருவரும் எவ்வளவு கிரையம் வாங்கியுள்ளார்கள் என்று என்னுடைய பிராதில் குறிப்பிடவில்லை. நான் அந்த பத்திர நகலை படிக்கவில்லை வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். வழக்கு தாக்கல் செய்த பிறகும் நான் யாா் யாா் என்ன இடம் என்ன விலைக்கு வாங்கினார்கள் என்று பார்க்கவில்லை. நான் 2001ல் பெங்களூா் சென்றுவிட்டேன். சர்வே எண். 21/2, 21/5 தான் என் தம்பி உடல்ஊனமுற்றவா் என்பதால் அரசாங்கம் அவருக்கு கொடுத்தார்கள். அதன் பட்டா எண். 474 என்றால் எனக்கு தெரியாது. பொன்னுசாமி மனைவி குமுதா கலைவாணன் கண்ணம்மாள் கலைச்செல்வி கருணாநிதி ஆகியோர்கள் பெயரில் உள்ளது அவர்கள் பொன்னுசாமி வாரிசுகள். அந்த சொத்து பொன்னுசாமிக்கு கொடுத்த சொத்துக்கள் என்பதால் தான் அவருடைய வாரிசுகளுக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த பட்டா போலியானது. பட்டா போலியாக மாற்றப்பட்டது தவறு என்று நான் கிராம நிர்வாக அலுவலருக்கு மனு கொடுத்தேன் அதில் எனக்கு

எந்த உத்தரவும் இல்லை. அந்த விவரத்தை நான் என் வழக்கில் சொல்லவில்லை. சர்வே எண்கள்.21/2, 21/5 சொத்தை தான் 11ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார். அந்த 2 சொத்தை தான் அவர் பிரதிவாதிகள் 12 முதல் 76 பிரதிவாதிகளுக்கு விற்றுள்ளார் என்றால் சரிதான். மற்ற சொத்துக்கள் பொறுத்து அவர் கிரையம் எதுவும் வாங்கவில்லை. மற்ற சொத்துக்கள் நிலமாக உள்ளது. பூர்வீக சொத்துக்கள் 430, 431 மற்றும் மனைக்கு நான் பட்டா போட்டுள்ளேன் அவ்வாறு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அண்ணன் திருமால் அரக்கோணத்தில் இருக்கிறார். விற்ற சொத்தை பிரதிவாதிகளிடம் அபகரிக்கும் நோக்கில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்' சரியல்ல. தாவா சொத்தை 11ம் பிரதிவாதி மனை பிரிவுகளாக காட்டி விற்றுள்ளதால் நான் பிராதில் சொல்லியுள்ள சொத்தின் மதிப்பு தவறானது என்றால் சரியல்ல. அவர் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தை பொறுத்து எந்தவித நிவாரணமும் கோராமல் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சொத்தை வாங்கியவரிடம் இருந்து பணம் அபகரிக்கும் நோக்கில் நானும் 1 முதல் 10 பிரதிவாதிகளும் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.